செ.வெ.எண்: 47 நாள்: 21.10.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் 30ஆம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்று வருவதை தொடர்ந்து திருக்குவளை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் திருக்கோளிலி நுண்ணூட்டச் சத்து பூங்கா துவக்க விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2021) நுண்ணூட்ட சத்துள்ள மரக்கன்றுகளை நட்டு துவங்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் 30ஆம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்று வருவதை தொடர்ந்து திருக்குவளை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் திருக்கோளிலி நுண்ணூட்டச் சத்து பூங்கா துவக்க விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2021) நுண்ணூட்ட சத்துள்ள மரக்கன்றுகளை நட்டு துவங்கி வைத்தார்.

நாகை 30 விழா நடைபெற்றுவருவதை தொடர்ந்து அரசு துறை சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருக்குவளை வட்டாட்சியர் அலுவலகத்தில் 16000 சதுர அடி நிலப்பரப்பில், திருக்குவளை வட்ட அலுவலக சரகத்திற்கு உட்பட்ட அனைத்து அரசு அலுவலர்கள், பனங்குடி சி.பி.சி.எல்.நிறுவனம், நாகை ஏடிஜே தர்மாம்பாள் பாலிடெக்னிக் கல்லூரி, ஈசனூர் ஆரிஃபா பாலிடெக்னிக் கல்லூரி ஆகியோரின் நிதி பங்களிப்போடு நுண்ணூட்ட சத்து பூங்கா அமைக்கும் பணி நடைபெற்றது.

இதில் ஊட்டச்சத்து, இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் சத்துகள் நிறைந்த நெல்லி, மாதுளை, எலுமிச்சை, சீத்தாப்பழம், கொடுக்காப்புளி, கொய்யா, சப்போட்டா, நார்த்தை போன்ற மரக்கன்றுகள் சிறு குழந்தைகள் மற்றும் எதிர்கால தலைமுறையினர்களுக்கு பயனளிக்கும் வகையில் இயற்கை உரம் இட்டு நடவு செய்யப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் திரு.து.துரைராஜ், திருக்குவளை வட்டாட்சியர் திரு.கு.சிவகுமார், ஊராட்சி மன்ற தலைவர் திரு.இள.பழனியப்பன், திருக்குவளை அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி முதல்வர் திரு.எம்.துரைராசன், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.எஸ்.சித்ரா, தோட்டக்கலை அலுவலர் திரு.ரெ.ஜெயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**